DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE,CHEYYAR

CASE NO. SC. No. 68/2024

Prosecution witness PW - 3

| | | |
|---|---|---|
| Name | …. | லோகநாதன் |
| Husband/Father's Name | .... | நடராஜன் |
| Village | .... | |
| Taluk | .... | |
| Caste | .... | |
| Calling | .... | |
| Religion | .... | |
| Age | …. | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of 27th day of January 2026.

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் முனுகபட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் வெங்கடேசன், சுரேஷ், ஜெகன் மற்றும் தரணி ஆகியோர்களை தெரியும். எதிரிகள் என் ஊரை சார்ந்தவர்கள். கடந்த மூன்றாம் மாதம் 2023 ஆண்டு காலை சுமார் 6.30 மணியளவில் நான் காலை கடன் முடிப்பதற்காக சென்று இருந்தேன். அப்போது யாரோ ஒரு நபர் உக்கார்ந்து கொண்டு இருப்பது போல் முள் தோப்பில் இருந்தது. நான் காலை கடன் முடித்துவிட்டு ரோடு பக்கம் வரும்போது வசந்தா என்பவர் அழுதுகொண்டு வந்தார். என் மகனை பார்த்தீர்களா என்று கேட்டார், அதற்கு நான் யாரோ ஒருவர் முள்தோப்பில் உக்கார்ந்து கொண்டு இருப்பதாக உள்ளது என்று சொன்னேன். நானும், வசந்தாவும் முள்தோப்பின் அருகில் சென்று பார்த்தபோது உக்கார்ந்து கொண்டு கயிற்றில் தொக்கியது போல் இருந்தார். அப்போது வசந்தா என் மகன் தான் என்று அழுதார். அதன்பிறகு கோவிந்தராஜ், ராமதாஸ் ஆகியோர் வந்து கயிற்றை அவிழ்த்தார்கள். எதனால் அவ்வாறு தூக்கு மாட்டிக்கொண்டார் என்று தெரியாது. எதிரிகளுக்கும், இறந்தவருக்கும் என்ன பிரச்சனை என்ன என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1, 2, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது முதல் விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தையும் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். வேறு எந்த தகவலும் சொல்லவில்லை.

**(3 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. )**

Taken down by me in open Court and read over / interpreted to the witness in the presence of the accused and admitted by him / her to be correct.

Sd/- N.Suresh
**Assistant Sessions Judge,**
**Cheyyar.**